அவர்களுக்குப் புதிய கார்டு புதுப்பிக்கக்கூடிய முறையும் இல்லை. அவர்களில் எத்தனையோ பேர் தாலுக்கா அலுவலகங்களில், ஒவ்வொரு அலுவலகத்திலும், 200, 300 பேர் மனு செய்தும் கார்டு கிடைக்காமல் இருக்கிறார்கள். அவைகளை உடனடியாக விசாரணை செய்து, அதற்கென தனி அதிகாரிகளைப் போட்டு விசாரித்து அவர்களுக்குக் கார்டுகள் கொடுத்தால் அந்த லோன் பெறுவதற்கு உதவிகரமாக இருக்கும். அதோடு இந்த 800 கார்டு என்பதை......(மணியடிக்கப் பெற்றது).

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே பதில் கூறி இருக்கிறேன். ஏற்கெனவே இருக்கக்கூடிய வட்ட வழங்கல் அதிகாரிக்கு இதிலே வேலைப்பளு அதிகமாக இருக்குமேயானால்தான் இன்னொரு அதிகாரியை அதிகப்படுத்தி அந்த வேலையை அவர்களைப் பார்க்கச் செய்யலாம். ஆனால் இப்போது இருக்கக்கூடிய வட்ட வழங்கள் அதிகாரிகளே இதைச் சரிபார்த்து, அட்டைகள் வழங்குவதற்கான அனைத்து வாய்ப்புகளும் இருக்கிற காரணத்தினாலே, வட்ட வழங்கல் அதிகாரி, மாவட்ட வழங்கல் அதிகாரிக்குத் துணையாக வேறு அதிகாரிகள் தேவையில்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏதாவது தனிப்பட்ட முறையிலே அப்படி குறைபாடுகள் இருக்குமேயானால், என்னிடம் கொடுத்தால் உடனடியாக அதற்குத் தீர்வு காணப்படும்.

மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்த்தல்

*2244—திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தூத்துக்குடியில் மட்டும் வசிக்கும் பண்ணையார் என்ற சமூகத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்க்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

தூத்துக்குடியில் வசிக்கும் பண்ணையார் சமூகத்தை மிகப்பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக்கோரும் செயற்குறிப்பு எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. எஸ். டேனியல்ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தூத்துக்குடி நகரத்திலே ஒரு பகுதியி

1990 ஆகஸ்ட் 23]

லேயும் சிதம்பரனார் மாவட்டத்திலே குலசேகரப்பட்டினம், முக்காணி, திருச்செந்தூர் ஆகிய பகுதிகளிலேயும் மட்டும் வசித்துக் கொண்டிருக்கிற பண்ணையார் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாடு முழுவதும் ஒட்டுமொத்தமாகப் பார்த்தாலும்கூட 10 ஆயிரத்திற்குமேல் ஜனத்தொகையிலே அவர்கள் இருக்க மாட்டார்கள். அதேநேரத்திலே, ஜாதியின் பெயரிலேதான் பண்ணையார் சமூகமே தவிர, அவர்களைப் பொறுத்தமட்டிலே பொருளாதாரத்திலும் கல்வியிலும் மிகவும் பிற்பட்ட நிலையிலே வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். தூத்துக்குடியிலே உப்பளத்தில் கூலித் தொழில் செய்துதான் அவர்கள் தங்களுடைய வாழ்க்கையை வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். ஆகவே, அந்தச் சமூகத்தை மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே, முதலாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவினுடைய அறிக்கையில் இந்தப் பண்ணையாருடைய வகுப்பைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் சொன்னது போல கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டு, அவர்கள் தமிழ்நாடு முழுவதும் 9,700 பேர் என்ற அளவுக்குத்தான் இருக்கிறார்கள் என்றும், அவர்கள் தங்களது வகுப்பினை மிகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கக் கோரும் கோரிக்கை நியாயமானதாகத் தோன்றுகிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால் அப்படித் தெரிவிக்கப்பட்ட கருத்து பட்டியலிலே இடம் பெறவில்லை. அதைப்போலவே, இரண்டாவது பிற்படுத்தப்பட்டோர் நலக் குழுவும் அந்தப் பட்டியலிலே அவர்களைச் சேர்க்கவில்லை. எண்ணிக்கை மிகக் குறைவாக இருக்கிற காரணத்தாலும், அவர்கள் பெரும்பாலோர் கூலிகளாக வேலை செய்கிற நிலைமையிலே உள்ள காரணத்தாலும், ஒரு 10 சதவீதம் பேர்கூட அவர்களிலே கல்வியறிவு பெற்றவர்கள் அல்ல என்ற அந்தக் காரணத்தாலும் மாண்புமிகு உறுப்பினருடைய இந்தக் கருத்தை ஏற்கலாம். சமூக அடிப்படையிலேதான் இந்தப் பண்ணையாரை ஏற்கலாமே தவிர, பொருளாதார அடிப்படையிலே என்று வைத்தால் பண்ணையாரை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க முடியாது. அதனால்தான் சமூக அடிப்படையிலே பார்க்கவேண்டுமென்று நாம் கருதுகின்றோம்.

திரு. வ. முல்லைவேந்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களையும் மிகவும் பிற்பட்டோர் பட்டியலில் சேருங்கள் என்று தமிழகத்தில் எந்தெந்த சமூகத்தைச் சேர்ந்தவர்கள் அரசுக்குக் கோரிக்கை அனுப்பியுள்ளார்கள் என்பதை அறிவிக்க இயலுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1990 ஆகஸ்ட் 23

9-30 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிராமணர்களைத் தவிர மற்ற எல்லோரும்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் அவர்களுடைய பதிலிலிருந்து, கோரிக்கை வந்தால் எங்களை ஏற்றுக்கொள் வார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி கோரிக்கை வந்து ஏற்றுக்கொள்ளப்பட்டால் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்ற சொல்லுக்கு அகராதியில் பொருள் வேறு எழுதப்படும்.

திரு. எச். எம். ராஜ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சமூகத்தை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்ப்பதற்கு அரசின் அடிப்படை விதிமுறைகள் என்னென்ன என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் கல்வி ரீதியாகவும், சமூக ரீதியாகவும் பிற்படுத்தப்பட்டவர்களாக இருப்பதோடு மாத்திரம் அல்லாமல் இட ஒதுக்கீடு அவர்களுக்கு என்று அமைந்தாலும் கூட அதையும் பயன்படுத்திக்கொள்ள முடி யாத சூழ்நிலையில் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தில் சிலபேர் குறுக்கே நிற்கிற காரணத்தால் அதிலிருந்து விடுபடுவதற்கு அவர் களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைக்க வேண்டிய சூழ்நிலை அமைகிறது.

திரு. அ.லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கின்ற சில சமூகத்தினர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேரவேண்டுமென்று விரும்புகிறார்கள். அதேபோல் முற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இருக்கின்ற சைவ வேளா ளர் போன்றவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர வேண்டும் என்று விரும்புகிறார்கள். இன்றைக்கு 27 சதவீதம் மத்திய அரசு பிற்பட்டோருக்காக இட ஒதுக்கீடு செய்திருக் கிறது. எனவே இப்படிப்பட்ட மாறிய சூழ்நிலையில் மீண்டும் யார், யார் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் உள்ளவர்கள் என்று தெளிவாக அறிந்துகொள்ள உதவியாக அம்பா சங்கர் கமிஷன் போன்று மீண்டும் ஒரு கமிஷன் அமைக்க அரசு முன் வருமா?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1990 ஆகஸ்ட் 23]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, புதிய தொல்லையை வரவழைத்துக்கொள்ள அரசு தயாராக இல்லை. இன்னொன்று, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பிற்படுத்தப்பட்டோருக்கு எதிரிடைச் சொல்லாக முற்படுத்தப்பட்டோர் என்று சொல்கிறார். அது சரியான சொல் அல்ல. இதை எல்லோரும் பயன்படுத்துகிறார்கள். ஆனால் அவர்கள் முன்னேறியவர்கள். தாங்களாகவே முன்னேறியவர்கள். மற்றவர்கள் அதாவது பிற்படுத்தப்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் எல்லாம் மற்றவர்களால் பிற்படுத்தி வைக்கப்பட்டவர்கள். அதனால் தான் பிற்படுத்தப்பட்டவர்கள் என்று சொல்கிறோம். பின்தங்கியவர்கள் என்று கூடச் சொல்வதில்லை. அவர்களாக யாரும் பின்தங்கிவிடவில்லை. மற்றவர்களால் பிற்படுத்தப்பட்டிருக்கிற காரணத்தால் பிற்படுத்தப்பட்டோர் என்றும் அதேபோல் மிகவும் பிற்படுத்தப்பட்டிருக்கிற காரணத்தால் அப்படியும் தாழ்த்தப்பட்டிருக்கின்ற காரணத்தால் தாழ்த்தப்பட்டவர்கள் என்றும் சொல்கிறோம். எனவே முற்படுத்தப்பட்டவர்கள் என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. முன்னேறியவர்கள் என்ற சொல்லைப் பயன்படுத்துவதுதான் சரியானது.

திரு. வே. தங்கபாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையில் அரசு வெளியிட்ட சீர் மரபினர் பட்டியலில் நெல்லை, முகவை மாவட்டங்களில் உள்ள மறவர் இனங்கள் சீர் மரபினர் பட்டியலில் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். ஆனால் மதுரை மாவட்டத்தில் உள்ள அதே சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் சீர் மரபினர் பட்டியலில் சேர்க்கப்படவில்லை. அவர்களையும் சேர்க்கவேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை வந்திருக்கிறதா? ஆமெனில் அரசு அதுபற்றிப் பரிசீலிக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே குற்றப் பரம்பரையினர் சட்டத்தின் படி அந்தப் பட்டியலில் இடம் பெற்றவர்கள்தான் சீர் மரபினர் என்று மாற்றப்பட்டிருக்கிறார்கள். குற்றப்பரம்பரையினர் சட்டத்திலே இருந்தவர்கள் அதிலே இருந்து விடுவிக்கப்பட்டு அப்படி உள்ளவர்கள் தான் சீர் மரபினர் என்று சொல்லப்பட்டு இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்த வகுப்பினர் அந்தப் பட்டியலிலே ஏற்கெனவே இடம் பெற்று இருப்பார்களேயானால், சீர் மரபினர் பட்டியலில் இணைப்பதற்கு எந்த மறுப்பும் இராது. கவனிக்கப்படும்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கு 20 சதவீதம் என்று ஒதுக்கியதற்குப் பிறகு ஒரு

நான்கைந்து வகுப்பார்கள் அதிலே சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள். அதனால் இந்த 20 சதவீதத்தை உயர்த்துவதற்கு அரசாங்கத்திலே ஏதாவது வழிவகை உண்டா? மேலும் சில இடங்களில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் என்று அதாவது துளுவ வெள்ளாளர், தொழுவ வெள்ளாளர் என்று மாற்றி சர்ட்டிபிகேட் வாங்க முயற்சி செய்கிறார்கள். அதைத் தடுக்க ஏதாவது உத்தேசம் உண்டா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிலபேர் தங்களுடைய வகுப்புகளின் பெயர்களை மாற்றித் தந்திரமாக இந்தச் சலுகைகளைப் பெற முயற்சித்தால், அது சுட்டிக்காட்டப்படுமேயானால் உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மிகவும் பிற்பட்டுத்தப்பட்டோர் பட்டியலில் நான்கைந்து சமுதாயங்கள் சேர்க்கப்பட்டிருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். அப்படி சேர்க்கப்பட்டிருந்தாலும் அது நம்முடைய உறுப்பினர் திரு. டேனியல் ராஜ் அவர்கள் குறிப்பிட்டதுபோல் 6000, 7000 பேர் என்ற அளவுக்குத்தான் மிகக் குறைந்த எண்ணிக்கை உள்ள சமுதாயங்கள்தான் சேர்க்கப்பட்டிருக்கிறதேயல்லாமல் பெரிய எண்ணிக்கை உள்ள சமுதாயங்கள் எதுவும் சேர்க்கப்படவில்லை.

கூட்டுறவுத் துறை மூலம் மேலும் சர்க்கரை ஆலை அமைத்தல்

*2580—திரு. இரெ. இராசமாணிக்கம் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் கூட்டுறவுத் துறை மூலம் மேலும் சர்க்கரை ஆலை அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எங்கெங்கு அமைக்க ஆய்வு செய்யப்பட்டுள்ளது?

9-35 மணி.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) தென் ஆற்காடு மாவட்டத்தில் கள்ளக்குறிச்சியிலும், செங்கை-அண்ணா மாவட்டத்தில் கும்மிடிப்பூண்டியிலும், திருவண்ணாமலை — சம்புவராயர் மாவட்டத்தில் போளூரிலும், நெல்லை—கட்டபொம்மன் மாவட்டத்தில் அம்பாசமுத்திரத்